www.StudyGuideIndia.com

7110(N)

Register Number | | | | | |

# பகுதி III — சிறப்புத் தமிழ்

# Part III — ADVANCED LANGUAGE — TAMIL

( New Syllabus )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 180

*குறிப்பு* : i) இவ்வினாத்தாள் 4 பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிற்கேற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து உரியவாறு விடையளிக்கவும்.

ii) 1 முதல் 30 வரையுள்ள வினாக்களுள் ஒவ்வொன்றிற்கும் மதிப்பெண் 1; 31 முதல் 38 வரையிலான வினாக்களுள் ஒவ்வொன்றிற்கும் மதிப்பெண்கள் 5; 39 முதல் 46 வரையிலான வினாக்களுள் ஒவ்வொன்றிற்கும் மதிப்பெண்கள் 10; 47 முதல் 50 வரையிலான வினாக்களுள் ஒவ்வொன்றிற்கும் மதிப்பெண்கள் 15.

## பகுதி I

*குறிப்பு* : அனைத்து வினாக்களுக்கும் பொருத்தமான விடைகளைத் தேர்ந்தெடுக்கவும். பொருந்து விடையினைக் குறிக்கும் எழுத்தை மட்டும் வினா எண்ணோடு இணைத்து விடைத்தாளில் எழுதவும். $30 \times 1 = 30$

1. இறைவன் எல்லாவற்றையும் தானே படைப்பவன் என்பதைக் கம்பர் எவ்வடியால் உணர்த்துகிறார் ?

அ) நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா

ஆ) அலகிலா விளை யாட்டுடை யாரவர்

இ) தலைவ ரன்னவர்க்கேசர ணாங்களே

ஈ) உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்.

2. ஆகுபெயர் உள்ள பாடலடி எது ?

அ) ஒழுக்கம் உடைமை குடிமை

ஆ) ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்

இ) அழுக்காறு உடையான்கண் ஆக்கம்

ஈ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல்.

[ Turn over

3. அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்த சொல்

தேறியார்க் குண்டோ தவறு ? இதனுள் குறை கூறப்படுபவர் யார் ?

அ) தலைவன் ஆ) தோழி

இ) தலைவி ஈ) அன்னை.

4. செங்குட்டுவனின் வில்லாற்றலைப் பரணர் எவ்வடியில் உணர்த்துகிறார் ?

அ) புற்றடங் கரவி னொடுங்கிய வம்பின்

ஆ) நொசிவுடை வில்லி னொசியா நெஞ்சிற்

இ) களிறெறிந்து முரிந்த கதுவாய் எஃகின்

ஈ) விழுமியோர் துவன்றிய வன்க ணாட்பின்.

5. "பெரியோரை வியத்தலுமிலமே

சிறியோரை யிகழ்த லதனினு மிலமே"

- இவ்வடிகளோடு இணைத்து நோக்கத்தக்க அறிவுரை யாது ?

அ) ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு

ஆ) கௌவை சொல்லின் எவர்க்கும் பகை

இ) நல்லிணக்கம் அல்லது அல்லல்படுத்தும்

ஈ) கீழோர் ஆயினும் தாழ உரை.

6. போர் முனையில் இறக்கும் தருவாயில் கன்னன், கண்ணனிடம் வேண்டுவது யாது ?

அ) எல்லாப் பிறவியிலும் இரப்பவர்க்கு அளிப்பதற்குச் செல்வம்

ஆ) இரப்பவர்களுக்கு வாரிவாரி வழங்கும் மனம்.

இ) இப்பிறப்பில் செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் இதயம்

ஈ) பெறுதற்கு எட்டாத் திருமாலின் திருக்கோலக் காட்சி.

7. கீழுள்ள பாரதியாரின் பாஞ்சாலி சபத அடிகளுள் எவ்வடியின் பாரதக்கதையில் சிக்கல்நிலை குறிப்பால் உணர்த்தப்படுகிறது ?

அ) வாது நின்னொடு தொடுக்கிலேன்

ஆ) தீது நமக்கு வராமலே

இ) சூதுக் கவரை யழைத் தெல்லாம்

ஈ) எண்ணத்தை நீ கொளல் வேண்டும்.

8. மக்கள் அறியாமையிலிருந்தனர் எனத்தெரிவிக்கும் சுரதாவின் பாடலடி எது ?

அ) பள்ளத்தில் நாம் வீழ்ந்து கிடந்தோம்

ஆ) வெள்ளத்தில் தோன்றியெழும் தண்ணீர் முட்டை

இ) அமைப்போர்க்குப் பல்லவியாய்

ஈ) கீர்த்தி ஒருநாளும் அழிவதில்லை.

www.StudyGuideIndia.com

9. டாக்டர். சே. சாதிக் அவர்களை இன்முகச் செவ்வியர் ( Optimist ) எனக்காட்டும் பாடல்வரி எது ?

அ) வேற்றுமை பண இனமும் மதமுமின்றி நன்கு

ஆ) மாற்றியோர் உலகுசெய்வோம் மாண்புடைய இவ்வுலகில்

இ) சேற்றிலே சேர்ந்துழலும் சீரற்ற சமுதாயம்

ஈ) ஆற்றலுறு ஆள்தம்மை அறிந்தறிந்தே ஆங்கு.

10. நியாயம் எனும் புதுக்கவிதையில்

''ஒரு நுங்கு ஒரு ரூபாயா, அநியாயமாக இருக்கிறதே! என்றேன்''

எனச் சொல்கேளான் கூறுகிறார். இவ்வடிகள் உணர்த்தும் குறிப்பு யாது ?

அ) நுங்கின் விலையேற்றத்தால் உழைப்பைப் பெறுபவர் துன்பப்படுகின்றனர்

ஆ) உழைப்பவர்களுக்கு நுங்கு வாழ்வளிக்கிறது

இ) உழைப்பினைப் பெறுபவர் உழைப்பவர் துன்பத்தை உணருவதில்லை

ஈ) உழைப்பவர் உழைப்பினைப் பெறுபவர் நலனைக் கருதுவதில்லை.

11. தவறான சொல்லாட்சி பெற்றுள்ள வாக்கியம் எது ?

அ) மிதிலைப்பட்டி என்னும் ஒரு ஊர் சேலம் மாவட்டத்தில் உள்ளது.

ஆ) அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்னும் ஓர் அன்பர் எனக்கு உதவினார்.

இ) அங்கே கலைமகளும் திருமகளும் ஒருங்கே களிநடம் புரிந்தனர்.

ஈ) பல அரிய தமிழ்ச்சுவடிகள் பல நூற்றாண்டுகளாகச் சேகரித்து அவர் வீட்டிலே பாதுகாக்கப் பெற்றிருந்தன.

12. 'பரம்பரைக்குணம்' எனும் கட்டுரையில் உ.வே.சா. 'கெட்டாலும் மேன் மக்கள் மேன்மக்களே' எனும் மேற்கோளை எடுத்தாண்டுள்ளார். இது யாருடைய முன்னோரைக் குறிக்கிறது ?

அ) சிற்றம்பலக் கவிராயர் ஆ) கட்டியப்ப முதலியார்

இ) வெங்களப்ப நாயக்கர் ஈ) இராமநாதபுரம் சேதுபதி.

13. சாலை சாலினியார் கருத்தடிப்படையில் கீழுள்ளனவற்றுள் எது தவறு ?

அ) தமிழகத்தில் இடமொழி வேறுபாடு இல்லை

ஆ) ஈழத்தில் மழை என்னும் சொல்லாட்சியில் ஒலிப்புப் பிறழ்ச்சி உள்ளது

இ) ஈழத்தவர் குழந்தையை மரியாதை மிகுதி கொண்ட சொல்லால் அழைக்கின்றனர்.

ஈ) 'படம் படித்தல்' எனும் சொல்லாட்சி தமிழகத்திலும் தற்போது நிலவுகிறது.

[ Turn over

www.StudyGuideIndia.com

தெரிவிக்க சாலை சாலினியார் தரும் எடுத்துக்காட்டு எது ?

அ) விற்பனவு ஆ) திணைக்களம்

இ) கடுதாசி ஈ) மறியல்.

15. அறிவு பெறும் வழிகளாகப் பெருஞ்சித்திரனார் குறித்தனவற்றுள் எது பிறர் ஒத்துழைப்பால் பெறப்படுவது ?

அ) காட்சி ஆ) கேள்வி

இ) உசாவல் ஈ) கல்வி.

16. 'தாழாது உழைத்தல்' என்னும் கட்டுரையில் 'தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்' என்ற குறளை மேற்கோட்படுத்தி பாவலரேறு உணர்த்துவது யாது ?

அ) செயலை முடிப்பதற்கு முயற்சியும் உழைப்பும் தேவை

ஆ) உழைப்பு, தேவை என்பன ஒரு செயலுக்குரிய கூலியாகும்

இ) தெய்வத்தையும் மனிதனால் வெல்ல இயலும்

ஈ) முயற்சியும் மெய்வருத்தமும் தெய்வத்தின் முன் நிற்காது.

17. <u>நன்றியுணர்வும்</u> மனிதனின் தெய்வம் பற்றிய சிந்தனைக்கு அடிப்படையாக அமைந்தது. கோடிட்ட தொடர் உணர்த்தும் பொருட்குறிப்பு யாது ?

அ) தெய்வச் சிந்தைக்கு நன்றி உணர்வுதான் முதன்மையான காரணம்

ஆ) தெய்வம் பற்றிய சிந்தனையால் நன்றியுணர்வு தோன்றியது

இ) நன்றியுணர்வு போன்ற பிறவும் தெய்வம் பற்றிய சிந்தனை தோன்றக்காரணமாயின

ஈ) எல்லா உணர்வுகளும் நன்றி உணர்வின் அடிப்படையாய்த் தோன்றின.

18. சிறு தெய்வ வழிபாடு பெருமைக்குரியதாகுமென்பதை நிலைநாட்டப் பேராசிரியர் ச. கணபதிராமன் எடுத்துக் காட்டும் சான்று யாது ?

அ) சிறு தெய்வங்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நிலவியுள்ளது

ஆ) பெருந்தெய்வக் கோயில் சுவடுகள் பல அழிந்துபட சிறுதெய்வக் கோயில்கள் நிலைத்து நிற்கின்றன

இ) சிறு தெய்வங்களுக்கென தனிவழிபாட்டு முறைகள் வகுக்கப்பட்டுள்ளன

ஈ) மாந்தர் இன இறைவழிபாட்டு முறை சிறுதெய்வங்களிலிருந்து தொடங்குகிறது.

19. <u>அதைப்போலவே</u> பாரதிதாசன் காவியங்களில் பெரிதும் எல்லாப் படைப்புகளிலும் 'பெண்ணிற் பெருந்தகையாவுள' என்ற பண்போவியங்களாக மானிட மாண்பின் மதிப்பாளர்களாகப் பெண்கள் விளங்குகின்றனர். - கோடிட்ட தொடரில் எந்த உவமை அமைந்துள்ளது ?

அ) பாரதிதாசன் படைப்புகள் ஆ) ஷேக்ஸ்பியரின் நாடகங்கள்

இ) பாரதியாரின் கவிதைகள் ஈ) சங்க இலக்கியங்கள்.

www.StudyGuideIndia.com

20. ஆப்ரகாம் பண்டிதரின் பிறந்த ஊரான சாம்பவர் வடகரையின் இருப்பிடமாக நான்கு குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் எது சரி ?

அ) செங்கோட்டை - சாம்பவர் வடகரை - கணக்கப்பிள்ளை வலசை - சுரண்டை

ஆ) கணக்கப்பிள்ளை வலசை - இலத்தூர் - ஆய்க்குடி - சாம்பவர் வடகரை - சுரண்டை

இ) செங்கோட்டை - இலத்தூர் - சுரண்டை - ஆய்க்குடி - சாம்பவர் வடகரை

ஈ) இலத்தூர் - சுரண்டை - சாம்பவர் வடகரை - ஆய்க்குடி.

21. பொருளாகு பெயர் உள்ள பாடலடி எது ?

அ) தாமரைச் செவ்வடி | ஆ) செய்யாள் உறையும் இல்லம்

இ) கார்ப்பயிர் வளர நீண்ட நாளாகும் | ஈ) நீலக்கண் நனைந்தது.

22. 'செய்பவன் கருவி நிலம் செயல் காலம்

செய்பொருள் ஆறும் தருவது வினையே' - இந்நூற்பாவிலுள்ள கோடிட்ட சொல்லின் விளக்கமாக அமையும் தொடர் எது ?

அ) நூல் படித்தான் | ஆ) அங்கே படித்தான்

இ) நேற்றுப் படித்தான் | ஈ) ஆதன் படித்தான்.

23. பலர்பால் வினைமுற்று எது ?

அ) படித்தீர் | ஆ) கற்றார்

இ) வரைந்தாய் | ஈ) எடுத்தாள்.

24. கீழுள்ளனவற்றுள் அசைநிலையாக வரும் இடைச்சொல் எது ?

அ) அற்று | ஆ) ஒப்ப

இ) அடடா | ஈ) மியா.

25. கீழ்வருவனவற்றுள் உரிச்சொல்லின் பயன்பாடு எது ?

அ) காலம் காட்டுதல் | ஆ) பெயர் வினைகளுக்கு அடையாக வருதல்

இ) ஒருமை பன்மை உணர்த்தல் | ஈ) வேற்றுமை உருபு ஏற்றல்.

26. கீழுள்ளவற்றுள் ஐந்தறிவு பெற்ற உயிர் எது ?

அ) மனிதர் | ஆ) தும்பி

இ) கறையான் | ஈ) சங்கு.

27. கீழுள்ளனவற்றுள் எது தற்குறிப்பேற்ற அணிக்குப் பொருந்தும் ?

அ) இயல்பு நிகழ்ச்சியில் தன் கருத்தினை ஏற்றுதல்

ஆ) தன் கருத்தைக் கூறிப் பிறர் கருத்து விளக்கல்

இ) நடக்காத நிகழ்ச்சியை நடந்ததாகக் கூறுதல்

ஈ) ஒன்றை விளக்கிப் பிறிதொன்றைச் சொல்லுதல்.

www.StudyGuideIndia.com

[ Turn over

28. ''தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்'' - இக்குறளில் பயின்றுள்ள அணி யாது ?

அ) மாறுபடு புகழ்நிலை ஆ) புகழாப் புகழ்ச்சி

இ) தற்குறிப்பேற்றம் ஈ) பிறிது மொழிதல்.

29. கீழுள்ளனவற்றுள் எது யாப்பிலக்கண முறைப்படி சரியானது ?

அ) நான்கு சீர்கள் கொண்டு வஞ்சித்தளை பெற்று வருவது வஞ்சிப்பா

ஆ) வஞ்சிப்பாவில் காய்முன் நேர் வருதல் சிறப்பு

இ) வஞ்சிப்பாவில் குறளடி மட்டுமே வரும்

ஈ) குறளடியும் சிந்தடியும் வஞ்சிப்பாவிற்குரிய அடிகள்.

30. வஞ்சித்துறைக்கும், வஞ்சித்தாழிசைக்கும் உள்ள வேறுபாட்டை கீழுள்ளனவற்று
எதனால் அமையும் ?

அ) அடிவகை ஆ) பாடல் எண்ணிக்கை

இ) சீர்வகை ஈ) அடி எண்ணிக்கை.

## பகுதி II

( ஒவ்வொரு வினாவிற்கும் ( 31 ஆம் வினா தவிர்த்து ) 50 சொற்களில் விடை தருக )

**பிரிவு 1 ( 31 – 32 )** 2 × 5 = 1

31. தாயே உயிரே தமிழே... எனத் தொடங்கும் மொழிவாழ்த்துச் செய்யுளை அடிபிறழாமல் எழுதுக.

அல்லது

'அரிது' என முடியும் சொல்வன்மை குறளையும், 'செல்லாமை' எனத் தொடங்கும் பிரிவாற்றாமை அதிகாரக் குறளையும் அடிபிறழாமல் எழுதுக.

32. பதிற்றுப்பத்தில் பரணர் சேரனின் சிறப்பை ''இனியார் உளரோ முன்னுமில்லை'' - எனக்கூறி விளக்குவது யாது ?

அல்லது

திரிதராட்டிரன் நேர்மை மிக்கவன் எனப் பாஞ்சாலி சபதத்தில் பாரதியார் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

**பிரிவு 2 ( 33 – 34 )** 2 × 5 = 10

33. 'அங்கே கலைமகளும் திருமகளும் ஒருங்கே களிநடம் புரிந்தனர்' என்று பரம்பரைக்குணம் கட்டுரையில் டாக்டர். உ.வே.சா. கூறும் மொழிநடைச் சிறப்பை விவரி.

அல்லது

ஈழத்தமிழ் மக்கள் நல்ல சொல்லாக்கத்தைத் தங்கள் பேச்சு வழக்கில் கொண்டுள்ளமைக்கு எடுத்துக்காட்டுத் தருக.

www.StudyGuideIndia.com

34. அறிவு பெறும் ஐந்து வழிகளைப் பாவலர் வழிநின்று விளக்குக.

*அல்லது*

தெய்வம் பற்றிய சிந்தனை மனிதனுக்கு ஏற்பட்டதற்குரிய காரணங்களாகப் பேராசிரியர் ச. கணபதிராமன் குறிப்பன யாவை ?

**பிரிவு 3 ( 35 – 38 :** எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக. **)** $2 \times 5 = 10$

35. ஆகுபெயர் என்றால் என்ன ? மூன்று ஆகுபெயர்களை எடுத்தாண்டு பொருள் தொடர்ச்சியுடைய உரைப்பகுதி எழுதுக.

36. வினைச்சொல் என்பது யாது ? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

37. உயிரினப்பாகுபாட்டை இலக்கணநூல் வழி நின்று விளக்குக.

38. 'ஐக்கூ' கவிதையை விளக்கி, ஒரு சான்று தருக.

## பகுதி III

**( 39 – 46 :** 100 சொற்கள் அளவில் விடை தருக. **)**

**பிரிவு 1** $1 \times 10 = 10$

39. ஒழுக்கத்தின் மேன்மையினைத் திருவள்ளுவர் எவ்வாறு வலியுறுத்துகிறார் ?

*அல்லது*

பெருஞ்சித்திரனாரின் 'இரவலர் புரவலை நீயுமல்லை' எனும் செய்யுள் உணர்த்தும் பண்டையச் சமுதாய நிலையினை வெளிப்படுத்துக.

**பிரிவு 2** $1 \times 10 = 10$

40. மனத்திட்பத்தின் தேவையைப் பாவலரேறு எவ்வாறு வலியுறுத்துகிறார் ?

*அல்லது*

ஆபிரகாம் பண்டிதரின் செயற்கரிய செயல்கள் பற்றி விவரி.

**பிரிவு 3 ( 41 – 44 :** எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக **)** $2 \times 10 = 20$

41. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் அகப்பொருள் நூல்களைப் பற்றிக் கட்டுரை வரைக.

42. சிலப்பதிகாரம் குறித்துக் கட்டுரை வரைக.

43. காரைக்காலம்மையாரின் போற்றிப்பாடல்கள் குறித்து விவரி.

44. பல்லவர் காலச் சமண இலக்கியங்களைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விவரி.

www.StudyGuideIndia.com

1 × 10 =

45. கீழுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து கட்டுரை வரைக. ( கட்டுரை உவமை, பழமொழி, மரபு, இணைத்தொடர் ஆகியன பெற்று அமைதல் வேண்டும் )

i) தேசிய ஒருமைப்பாடும், மாணாக்கர் பங்கும்.

ii) அறிவியலும், ஆக்கச் செயல்களும்.

iii) ஒழுக்கம் உயர்வு தரும்.

46. உங்கள் தெருவிற்கு மின்விளக்கு வசதிவேண்டி உரிய அலுவலருக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் எழுதுக.

*அல்லது*

நும் கல்வித்தகுதி, வீட்டுச் சூழ்நிலை முதலியவற்றைக் குறிப்பிட்டு வேலைவேண்டி உரிய நிறுவனத்திற்கு விண்ணப்பம் எழுதுக.

1 × 10 = 10

## பகுதி IV

( 150 சொற்கள் அளவில் விடைதருக )

47. திருவள்ளுவர் வழிநின்று சொல்வன்மையினை வரையறுத்து அதன் சிறப்பினை எடுத்துக்காட்டுக.

*அல்லது*

நெய்தல் நிலவழகையும், தலைவியை தலைவன் விரைந்து மணக்க தோழி மேற்கொண்ட முறையையும் விளக்குக.

1 × 15 = 15

48. பண்டைக்காலச் சமுதாய நிலையினை மணிமேகலை மலர்வனம்புக்க காதைச் செய்திகளிலிருந்து விளக்குக.

*அல்லது*

அறிஞர் அண்ணாவின் சிறப்புகளை உவமைகள் கொண்டு கவிஞர் சுரதா எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ?

1 × 15 = 15

49. 20ஆம் நூற்றாண்டில் தொடக்ககால உரைநடையில் பிறமொழிச் சொற்கள் மலிந்திருந்தமையினை, டாக்டர். உ.வே.சா. வின் கட்டுரை கொண்டு வெளிப்படுத்துக.

*அல்லது*

ஈழத்தமிழ் மக்கள் பேச்சிலுள்ள தனித்தன்மையான சொல், தொடர் வழக்குகளை விளக்குக.

1 × 15 = 15

50. சிறுதெய்வ வழிபாட்டுமுறை பண்டைக்காலத்தில் நிலவியதைப் பேராசிரியர் ச. கணபதிராமன் எவ்வாறு நிறுவுகிறார் ?

*அல்லது*

பாரதிதாசன் படைப்புகளில் 'மானுடம்' நிலைத்திருந்ததெனத் திலகவதி எவ்வாறு விளக்குகிறார் ?

1 × 15 = 15

www.StudyGuideIndia.com